ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# பத்துப்பாட்டு -ஆற்றுப்படை இலக்கியத்தில் கலைஞர்களின் வாழ்வியல்

க.கவிதா & முனைவர்.சு.பானுமதி

இணைப்பேராசிரியர், தமிழாய்வு மையம்,

ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி-2

**ஆய்வுச்சுருக்கம்:**

சங்க இலக்கியம் என்பது எட்டுத்தொகை, பத்துப்பாட்டு பாடல்களின் தொகுப்பாகும். இவற்றுள் பத்துப்பாட்டு பாடல்களில் செம்பாதியாக இருப்பது ஆற்றுப்படை பாடல்கள் ஆகும். ஆற்றுப்படை பாடல்கள் பாணன், கூத்தன், பொருநன், விறலி ஆகிய கலைஞர்களின் வாழ்வியலை சித்தரிக்கிறது. இக்கலைஞர்கள் வறுமையில் வாடுகின்றனர்.வள்ளல்களைச் சந்தித்து புகழ்ந்துப்பாடிப் பரிசில் பெற்று வாழ்கின்றனர் வறுமையில் வாட காரணம் யாதெனின் இனக்குழு சமூக அமைப்பு மறைந்து, போர்கள் ஏற்பட்டு தனிமனித சொத்துரிமை வளர்க்கிறது. தலைவன் மன்னனாகிறான் போர்களினால் விழாக்கள் நிகழாது தடைப்பட்டதினால், விழாக்களில் திறனைக் காட்டிப் பிழைத்த கலைஞர்கள், வள்ளலை நாடி இரக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். நாடோடி வாழ்க்கையினராகப் பிறர்க்கு உதவும் பண்பினராக இருக்கின்றனர்.

**கடவுச்சொற்கள்:**

ஆற்றுப்படை,கலைஞர்கள், இனக்குழு சமூகம், இரத்தல்.

**முன்னுரை:**

பழந்தமிழிலக்கியங்கள் என்பன எட்டுத்தொகை,பத்துப்பாட்டு இது பலரும் ஒப்பிய முடிவு. இவற்றுள், பத்துப்பாட்டில் ஐந்துப் பாடல்கள் ஆற்றுப்படையைச் சார்ந்தவையாகும். இவ்ஆற்றுப்படை பாடல்களைப்பழந்தமிழர்களின் வரலாற்றுப் பெட்டகம் எனலாம். பொதுவுடமை சமூகமாகத் திகழ்ந்த இனக்குழுக்கள் சிதைந்து, தனிமனிதசொத்துரிமை கொண்ட தலைவன், மன்னன் உருவாகிய சூழலும், கலைத்திறத்தால் மக்களிடையே செல்வாக்கு மிக்கவர்களாக வாழ்ந்த கலைஞர்கள் வள்ளல்களை, மன்னர்களை அண்டிப் பிழைப்பு நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட சூழலும் ஆற்றுப்படை இலக்கியங்களில் பதிவுச்செய்யப்பட்டுள்ளன. இவற்றில் கலைஞர்களின் வாழ்வியலை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**ஆற்றுப்படை விளக்கம்:**

தமிழின்முதல்இலக்கணநூலான தொல்காப்பியம்,ஆற்றுப்படைக்கெனத் தனி இலக்கணத்தை வரையறுக்கிறது..

“ **கூத்தரும் பொருநரும் பாணரும் விறலியும்**
**ஆற்றிடைக்காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**
**சென்றுப் பயனெதிரச் சொன்னப் பக்கமும்.” -(தொல்.புறத்.நூ.36)**

இந்நூற்பாவில் ஆற்றுப்படை என்பது கூத்தரும்,பொருநரும்,பாணரும், விறலியுமாகிய கலைஞர்கள் வழியில் பயணிக்கின்ற போது, தங்களைப் போன்ற கலைஞர்களைப் பார்த்து, அவர்களின் வறுமையைப் போக்குவதற்கானவழிமுறையை எடுத்துக் கூறுவது. அதாவது, வறுமை நீங்கி, தாங்கள் வளம் பெற்றது போல நீங்களும் பெறுவீர்கள் என வள்ளலிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைகிறது. இவ்வரையறை கூத்தர், விறலி, பாணன், பொருநன் முதலான கலைஞர்களைப் பற்றியதாக அமைந்திருக்கிறது. இதிலிருந்து, தமிழ் இலக்கணன் தொல்காப்பியர் காலத்திலேயோ,அல்லது அதற்கு சற்று முன்பாகவோ கூத்தர்,பாணர், பொருநர், விறலியர் முதலான கலைஞர்கள் தங்கள் கலைத்தொழிலை மக்களுக்குக் காண்பிப்பதை விட்டு விட்டு, செல்வாக்குமிக்க வள்ளல்களுக்குத் தங்கள் கலைத் திறனைக்காட்டுகின்றதையும்,வறுமையினால் வள்ளல்களை அண்டிப் பிழைக்கும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கின்றதையும்.ஆற்றுப்படைக்கான இவ்விலக்கண வரையறை நன்குப் புலப்படுத்துகிறதைஅறியமுடிகிறது.

**நாடோடிப்பண்பினர்:**

பாணர், கூத்தர், பொருநர், விறலியரான கலைஞர்கள் நிலையாக ஓரிடத்தில் வசிப்பதில்லை. இதனைப் புறநானூற்றுப் பாடல் ஒன்றில், ஔவையார் அதியமான் பரிசில் நீட்டித்த விடத்து,

**“கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி**
**தன்அறியலன் கொல்? என்னறியலன் கொல்?........**

**மரம் கொல் தச்சன் கைவல் சிறாஅர்**

**மழுவுடைக் காட்டகத்துஅற்றே**

**எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே.” - (புறம்.206)**

எனப் பாடியிருந்த புறப்பாடல் வழி கலைஞர்கள் ஓரிடத்தில் நிலைத்து இருப்பதில்லை என்றும், அவர்களுக்குச் சென்ற இடங்களில் எல்லாம் மதிப்பு இருந்ததும் அறியமுடிகிறது.மேலும் இக்கலைஞர்கள் விழாக்கள் நடைபெறுகின்ற ஊர்களில் சுற்றத்தோடுத் தங்கியிருந்து, விழாவில்தங்கள் கலைத் திறனைக் காண்பித்து, விழா முடிந்தவுடன் சென்றுவிடுகின்றனர். அவ்வூரினர் பல நாட்கள் கலைஞர்களைத் தங்களிடையே இருக்கசெய்து, அக்கலைஞர்களின் பசித்துயரைப் போக்குவதற்கு விரும்புவதாக இருந்தாலும், கலைஞர்கள் அவ்வூரில் தங்கியிருக்க விரும்பாது,விழா நிகழுகின்ற மற்ற இடங்களுக்குச் சென்றுவிடுகின்றதைக் காணமுடிகிறது. இதனை,

**“அறாஅ யாணர் அகன்தலைப் பேர்ஊர்,**

**சாறுகழி வழிநாள்,சோறுநசை உறாஅது,**

**வேறுபுலம் முன்னிய விரகுஅறி பொருந.” - (பொருந.ஆ.1-3)**

என்ற பொருநராற்றுப்படை பாடல் வரிகள் மூலமும்,விறல் மிகுந்த கலைஞர்கள், தங்கள் கலைத்திறனை மக்களுக்குக் காண்பித்து வாழும் வாழ்க்கையினர் என்றும், அதனால் நாடோடி வாழ்க்கை வாழ்பவர்களாய் இருக்கின்றனர். என்றும் அறியமுடிகிறது.

பொதுவுடமை சமூகம் சிதைந்து, தனியுடமை சமூகமாக உருப்பெற்ற காலத்திலும்,விழாக்களில் மக்களுக்கிடையே கலைத்திறனைக் காட்டிய கலைஞர்கள்.வள்ளல்களைத் தேடிச்சென்றுவள்ளகளிடம் கலைத்திறனைக்காண்பித்துஇரக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.இதனை,

**“பழுமரம் தேடும் பறவை போல.” - (பெரும்பாண்.20)**

**“ பழுமரம் உள்ளிய பறவையின்”. - (பொருநர்.ஆ.64)**

என்னும் வரிகள் மூலம், கலைஞர்களின்நாடோடி வாழ்க்கைமுறைமாற்றம் பெறாமல் இருப்பதைக் காணமுடிகிறது.

**பிறர்க்கு உதவும் பண்பினர்:**

கூத்தர், பொருநன்,பாணன், விறலி முதலான கலைஞர்கள் வள்ளல்களைச் சந்தித்து, தங்கள் வறுமை நீங்கிய நிலையில்,தங்களைப் போன்று வறுமையில் வாடுகின்ற கலைஞர்களைத், தாங்கள் செல்கின்ற வழியில் சந்திக்கின்ற பொழுது, அவர்கள் மீது இரக்கம் கொண்டு, தாங்கள் வறுமையில் இருந்த முன்நிலைமையை அவர்களிடம் எடுத்துக்கூறியதோடு, தாங்கள் வறுமை நீங்கி வளமை அடைந்ததையும் எடுத்துக்கூறி, நீங்கள் இன்ன வள்ளலிடம் சென்றால் உங்கள் வறுமையும் நீங்கும், நீங்கள், உங்கள் சுற்றத்தோடு மகிழ்ந்திருப்பீர்கள் என வழிகாட்டுகின்றனர். இவ்வாறு தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற ஆன்றோர் வாக்குப்போல தானும்,தன் சுற்றம் மட்டும் வாழ நினைக்காது,பிறர்துயர் துடைப்பவர்களாக இருப்பதைக்

காணமுடிகிறது. இதனை, ஆற்றுப்படை அனைத்திலும் காணமுடிகிறது.

பொருநராற்றுப்படையில்,

**"ஆடுபசி உழந்தநின் இரும்பேர் ஒக்கலொடு**
**நீடுபசி ஒராஅல் வேண்டின்,நீடுஇன்று**
**எழுமதி, வாழி, ஏழின் கிழவ." - (பொருநர்,ஆ.61 - 63)**

என்று பொருநன் எதிர் வந்த பொருநனிடம் வறுமையில் இருந்து உய்வும் பெறும் வழியை எடுத்துரைப்பதை அறியமுடிகிறது.

இதனைச் சிறுபாணாற்றுப்படையில்,

**"அழிபசி வருத்தம் வீட......**
**சிறுகண் யானையோடு பெருந்தேர் எய்தி**
**யாம் அவண் நின்றும் வருதும் - நீயிரும்,**
**இவண்நயந்து இருந்த இரும்பேர் ஒக்கல்**
**செம்மல் உள்ளமொடு, செல்குவிர் ஆயின். - (சிறுபாண்.140 -146 )**

எனக்கூறுவதன் மூலமும்,

பெரும்பாணாற்றுப்படையில்,

**"கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்**
**புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண,......**
**வால்உளைப் புரவியொடு வயக்களிறு முகந்துக்கொண்டு,**
**யாம்அவ ணின்றும் வருதும் - நீயிரும்......**

**பல்வேல் திறையற் படர்குவிர் ஆயின்**

**கேள் அவன் நிலையே கெடுகநின் அவலம்.” - (பெரும்பாண்,20-35)**

எனப் பாணனிடம் கூறுவதன் மூலமும் அறியமுடிகிறது.

கூத்தராற்றுப்படையில்,

**“தூமலர் துவன்றிய கரைபொரு நிவப்பின்**

**மீமிசை நல்யாறு கடற்படர்ந் தாங்கு**

**யாமவண் நின்றும் வருதும் நீயிரும்**

**கனிபொழி கானம் கிளையொடு உணீஇய.” - (மலைப்படுகடாம்.-51-55)**

இவ்விதம் பாணர். பொருநர், விறலியர் முதலான கலைஞர்கள் தாங்கள் உற்ற வறுமை நீங்கி வளமை பெற்றதுப் போல், வறுமையுற்ற மற்றவர்களின் வறுமையைப் போக்கும் வழிமுறையை எடுத்துரைப்பதைக் காணமுடிகிறது.இதன் வழி கலைஞர்கள் தனக்கென வாழாப் பெருந்தகையாளர்கள் என அறியமுடிகிறது.

**அறிவாற்றல் மிக்கவர்கள்:**

கலைஞர்கள், மக்கள் வாழிடங்கள், நிலப்பகுதிகள், குடியிருப்பு, தொழில், உணவுப்பழக்கம், விருந்தோம்பும் பண்பாடு என்பனவற்றை நன்கு அறிந்தவர்களாக இருக்கின்றனர்.

பொருநராற்றுப்படையில் பொருநன், சோழநாட்டின் வளம், வனப்பும், காவிரி ஆற்றின் சிறப்பினை எடுத்துக் கூறுவதோடு அப்பகுதியில்

ஆட்சிச் செய்கின்ற கரிகாலனைப் பற்றியும் நன்கு அறிந்தவனாகக் காணப்படுகிறான்.

சோழநாட்டின் பரப்பினை,

**"ஒல்லெனத்திரை பிறழிய இரும்பௌவத்துக்**

**கரை சூழ்ந்த அகன்கிடக்கை" - (பொருநர்.ஆ.1-4)**

கரிகாலன் பிறப்பினை,

**"உருவப் பல்தேர் இளையோன் சிறுவன்,**

**தாய்வயிற் றிருந்து தாயம் எய்தி." - (மேலது.130-133)**

இவ்விதம் கலைஞனான பொருநன், கரிகாலன் நாடு, வளம், பிறப்பு, செய்த போர், வெற்றி, ஈகை பற்றி நன்கு அறிந்தவனாக இருக்கிறான்.

**சிறுபாணாற்றுப்படையில்,**

சிறுபாணன், கடையேழு வள்ளல்கள் பற்றியும், அவர்களின் குடிச்சிறப்புப் பற்றியும், மன்னன் நல்லியக்கோடன் பற்றியும், அவனது நாட்டு வளம், அவனது வெற்றி, ஈகை பற்றியும், இனக்குழுக்களாகிய உமணர்,பரதவர்,நுளைமகள், எயினர், எயிற்றியர்,உழவர்,உழத்தியர் பற்றியும் அறிந்தவனாக இருப்பதைக் காணமுடிகிறது.

நுளைமகள் கள் தயாரித்தல் பற்றி,

**"ஓங்குநிலை ஒட்டகம் துயில்மடிந் தன்ன**

**வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகின்**

**கரும்புகைச் செந்தீ மாட்டி,பெருந்தோள்,**

**மதியேக்கறூஉம் மாசுஅறு திருமுகத்து,**

**துதிவேல் நோக்கின்,நுளைமகள் அரித்த**

**பழம்படு தேறல் பரதவர் மடுப்ப**

**கிளைமலர்ப் படப்பைக் கிடங்கில் கோமான்,"- ( சிறுபாண்.153-160)**

இவ்விதம் நுளைமகள், கடலில் மிதந்து வந்த மணமிக்க விரகினால்,கள் தயாரிப்பதை காணமுடிகிறது.

பெரும்பாணாற்றுப்படையில்,

பெரும்பாணன், இளந்திரையன் ஆட்சி, போர், வெற்றி, ஈகை பற்றியும், ஐந்திணைக்குடிகளாகிய எயினர், எயிற்றியர், கானவர், கோவலர், ஆயர், ஆய்ச்சியர், வலைஞர், உமணர் பற்றியும் அவர்களின் விருந்தோம்பல் பற்றியும், தோப்புக்குடிகள், அந்தணர்கள் பற்றியும், திருவெகா, கச்சி முதலான நகரங்கள் பற்றியும் அறிந்தவனாக இருப்பதைக் காணமுடிகிறது.

**எயிற்றியர் புல்லரிசி எடுத்தலைப் பற்றி,**

**"மான்தோல் பள்ளி மகவோடு முடங்கி,**

**ஈன்பிணவு ஒழியப் போகி,நோன்காழ்**

**இரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோல்**

**உளிவாய்ச் சுரையின் மிளர மிண்டி,**

**இருநிலக் கரம்பைப் படுநீறு ஆடி,**

**நுண்புல் அடக்கிய வெண்பல் எயிற்றியர்."-(பெரும்பாண்,89-94)**

கூத்தராற்றுப்படையில்,

கூத்தன், நன்னன் என்ற மன்னன் பற்றியும், அவனது வீரம், கொடை பற்றியும், மலை நாடு பற்றியும், அருவிகள் பற்றியும்,வளம் பற்றியும்,மலைகளில் உண்டாகும் பல்வேறு ஒலிகள் பற்றியும்,அதில் வாழ்கின்ற கானவர்கள்,குறவர்கள், கோவலர்கள், உழவர்கள் பற்றியும் எடுத்துரைப்பதைக் காணமுடிகிறது.

**கானவர்களின் விருந்தோம்பல் பற்றி கூறுமிடத்து,**

**“மணஇல் கமழும் மாமலைச் சாரல்**
**தேனினர் கிழங்கினர் ஊனார் வட்டியர்**
**சிறுகண் பன்றிப் பழுதுளிப் போக்கிப்**
**பொருதுதொலை யானைக் கோடுசீ ராகத்**
**தூவோடு மலிந்த காய கானவர்.” - (மலைப்படுகடாம்,151-155)**

இவ்வாறு கலைஞர்கள் அவர்கள் வாழ்ந்த காலத்து நாடு,நகரம், ஊர்கள், குடிகள், பண்பாடு, மன்னன், அவனதுஆட்சி என அனைத்தையும் அறிந்த அறிவாற்றல் உள்ளவர்களாக இருக்கின்றதை அறியமுடிகிறது.

**முடிவுரை:**

ஆற்றுப்படை இலக்கியத்திலுள்ள கூத்தர், பாணர், பொருநர், விறலியர் முதலான கலைஞர்கள் தங்கள் கலைத்திறனால் மக்களிடையே செல்வாக்குமிக்கவர்கள் என்பதுவும், விழா நடைபெறுகின்ற இடங்களுக்கு மாற்றலாகிச் சென்று கொண்டே இருப்பதால் நாடோடிப்பண்பினர்,

என்பதுவும்அறியப்படுகிறது.மேலும்,இக்கலைஞர்கள் பல்வேறு இடங்களையும், அப்பகுதியில் வாழ்கின்ற பல்வேறு இனக்குழுக்களைப் பற்றியும், அவர்களின் குடியிருப்புகள், உணவுப் பழக்க வழக்கம், தொழில்கள், விருந்தோம்பல் எனப் பல்வேறு இனக்குழுக்களின் பண்பாட்டையும் அறிந்த அறிவாற்றல் மிக்கவர்களாகயிருக்கின்றனர். இனக்குழு சிதைந்து குறுநிலமன்னர்கள், மன்னர்கள் தோன்றிய நிலையில், அவர்களின் தலைமுறைப் பற்றியும், அரசாட்சி, போர், வெற்றி, ஈகை பற்றியும் அறிந்தவர்களாக இருக்கின்றனர்,இத்தகைய செல்வாக்குமிக்க,திறனுள்ள இக்கலைஞர்கள் போரினால் விழாக்கள் இல்லாது போனதால், வறுமையுற்று வள்ளல்களை நாடி இரந்து வாழுகின்ற இழிநிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கின்றதை ஆற்றுப்படை இலக்கியங்கள் வாயிலாக அறிந்துக் கொள்ள முடிகிறது.

**துணைநூல்பட்டியல்:**

1.பத்துப்பாட்டுத்தொகுதி - 1,2 (NCBH-வெளியீடு)

2.தொல்காப்பியமும் இனவரைவியலும் - முனைவர்.ஞா.ஸ்டீபன்

3.பண்பாட்டு மானிடவியல் -பக்தவச்சலபாரதி

4.பத்துப்பாட்டாராய்ச்சி -மு.இராசமாணிக்கனார்